**மா.சந்திரசேகரன், இ.ஆ.ப.,**
பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும்
பேரூராட்சிகளின் ஆய்வாளர்

நேரடி : 2534 0352
நிகரி : 2535 8744
மின்னஞ்சல் : dtp@tn.nic.in

குறளகம், சென்னை – 108

**ந.மு.க.எண். 9936/2012/இ1 நாள்.24.7.2012**

அன்புடையீர், வணக்கம்.

பொருள்– மரக்கன்று நடுதல்–பேரூராட்சிகள் நிர்வாகம்–பேரூராட்சிப் பகுதிகளில் மரக்கன்று நடுதல் மற்றும் பராமரிப்பு செய்தல்–தொடர்பாக

---

பூமியில் விலங்குகள் தோன்றுவதற்கு முன்பே வனங்கள் தோன்றியதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வனங்களே பூமியின் நுரையீரல்கள் என்று வர்ணிக்கப்படுகிறது. நாம் உயிர் வாழத் தேவையான பிராண வாயுவை வழங்குவதிலும், கரியமில வாயுவை உட்கிரகிப்பதிலும் மரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இவை தவிர, மழை பொழிவை பெறுவதற்கும், மண் அரிப்பை தடுப்பதற்கும் மற்றும் மற்ற அன்றாடத் தேவைகளுக்கும் மரங்கள் பயன்படுகின்றன. புவி வெப்பமயமாதலுக்கு மாற்றாக மரங்கள் வளர்ப்பது மிகவும் அவசியமாகும். ஒரு நாட்டின்/மாநிலத்தின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாத அளவுக்கு காடுகள் இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. எனவே, பேரூராட்சிகளில் வாய்ப்புள்ள இடங்களில் மரக்கன்றுகள் நட கருதலாம். அதன்படி பேரூராட்சிகளில் மரக்கன்றுகள் நட வாய்ப்புள்ள இடங்களை தேர்வு செய்து, அங்கு மண்ணின் தன்மைக்கேற்ப எவ்வித மரக்கன்றுகள் நடலாம், எவ்வளவு இடைவெளி விட்டு நடலாம், போன்ற விவரங்களை அந்தந்த பகுதிகளில் உள்ள வனத்துறை அலுவலரிடம் ஆலோசித்து திட்டமிட கேட்டுக் கொள்கிறேன். அவ்விதம் திட்டமிட்ட பின்பு, வனத்துறையின் நாற்றங்காலிலிருந்து நாற்றுகளைப் பெற்று நடவும், அதனை நன்கு பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான செலவினத்தை விதிமுறைகளை பின்பற்றி பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன். இதுகுறித்து இணைப்பு–1ல் கண்ட படிவத்தில் விவரங்களை சமர்ப்பிக்கவும், இணைப்பு–2ல் கண்ட கால அட்டவணையில் தெரிவித்துள்ளபடி நடவடிக்கை எடுக்கவும், கேட்டுக் கொள்கிறேன். எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை உடன் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள,

(மா.சந்திரசேகரன்)

இணைப்பு–படிவம் மற்றும் கால அட்டவணை

பெறுநர்
திருவாளர் ...............................................,
தலைவர்,
……………... பேரூராட்சி,
............................. மாவட்டம்.

நகல்: அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்.

## இணைப்பு–1

| வ. எண். | பேரூராட்சியின் பெயர் | மரங்கள் நட உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் | வகைபாடு | பரப்பளவு | சாலை எனில் நீளம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |

| மரக் கன்றுகள் வகை | எண்ணிக்கை | வனத்துறையினரால் வழங்கப்படும் மரக்கன்றின் விலை விபரம் | மரக்கன்றினை பாதுகாக்க சுற்றி வேலி அமைக்க ஆகும் செலவு விபரம் | தண்ணீர் பாய்ச்ச செய்யப்பட்டுள்ள ஏற்பாடு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | | | | | |

## இணைப்பு–2

| | | |
|---|---|---|
| 1 | மரக்கன்றுகள் நடுவதற்கான இடங்களை தேர்வு செய்தல் | 31.7.2012க்குள் |
| 2 | வனத்துறையினரை கலந்து ஆலோசித்தல் | 3.8.2012 |
| 3 | இயக்குநர் அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்புதல் | 6.8.2012 |
| 4 | குழிகள் தோண்டுதல் | 10.8.2012 |
| 5 | மரக்கன்றுகள் நடுதல் | 15.8.2012 முதல்<br>15.9.2012க்குள் |